(ஆ) கிராமப்புற மின் வசதிக் கழகம் முழுவதும் கடனாகவே வழங்குகிறது. மானியம் ஏதும் அளிப்பதில்லை. இந் திருவனத் திட்டங்களை நிறைவேற்ற மின் வாரியத்திற்கு தனியே மாநில அரசு, மானியமோ கடனோ அளிப்பதில்லை.

(இ) கிராமப்புற மின் வசதிக் கழகத்தின் திட்டம் 1970—71-ஆம் ஆண்டு முதலாவதாக மதுரை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நீலகிரி மாவட்டம் நீங்கலாக மாநிலம் முழுவதுமாக விரிவாக்கப்பட்டது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே 36 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பணம் பெற்றும் இன்றைய தினம் வரையிலே கிராமங்களிலே தெரு விளக்குகள் எரியாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தெரு விளக்குகள் எரியச் செய்கின்ற நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

மின்வாரியத் தொழிலாளர்களின் பிராவிடண்ட் நிதிக் கணக்குகள்.

* வினா எண் 545—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகமும், எத்தனை ஆண்டுகளுக்கானது கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(ஆ) அவற்றைக் கொடுக்க முடியாமல் நின்று போனதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ச. இரமச்சந்திரன் :

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகங்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

(ஆ) நிதி கணக்குப் பராமரிப்புப் பணியினை கணக்கு இயல் பிரிவிலிருந்து திட்டங்கள் மற்றும் வட்டங்களுக்குப் பரவலாக்கப்பட்டதின் (Decentralisation) விளைவாக சில செயல்முறை இடையூறுகள் ஏற்பட்டதால் இது முடியவில்லை. இப்பணியினை உடனே முடிக்கும்படி சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மின் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

1981 மார்ச் 30]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இதே சட்டப்படி கேள்வியிலே கேட்கப்பட்டிருக்கிற பொருள் செய்யப்படாவிட்டால் கடுமையான நிலைமை ஆயிற்றே, மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய நிலைமை ஆயிற்றே. தனியார் துறையிலே உள்ள முதலாளிகள் மீறியிருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறபோது உதாரணமாக இருக்க வேண்டிய அரசாங்கமே மீறக்கூடிய நிலைமை இருப்பதால் உங்கள் பேரிலே ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? எடுக்கப்பட்டு இருந்தால் என்ன நடவடிக்கை என்பதைச் சொல்வார்களா? எடுக்காமல் இருந்தால் அதைப்பற்றி ரெப்ரசன்டேஷன் பண்ணப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நடவடிக்கை தேவையில்லை. காரணம் மாண்புமிகு உறுப்பினர்கூட மின் வாரியத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருக்கிறார். ஆகவே மின் வாரியம் செய்வதற்கு நாமும் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் 1972-ஆம் ஆண்டு பாஸ் புக் தரவேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். ஆனால் கணக்குகள் வைக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அல்ல, கணக்குகள் இருக்கின்றன. பாஸ் புக் தேவையில்லை என்ற நிலைமை இருக்கிறது. காரணம் பிராட்மா என்ற இயந்திரத்தின் மூலமாக சம்பளப் பட்டியல் விவரங்கள் தருகிறபோது பிராவிடண்ட் பண்ட் பணம் எவ்வளவு பிடிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் தந்து விடுகிறார்கள். பிரவின்சியல் ஸ்டாபுக்கு நாம் அதைத் தெரிவித்து வருகிறோம். ரெகுலர் ஸ்டாபுக்கு அதை அமல்படுத்தப்போகிறோம். ஆகவே பாஸ் புக் கொடுத்துத்தான் அந்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மின்சார வாரியம் சம்பளப் பட்டி தயாரிக்கிறபோது அதையும் சேர்த்து தெரிவித்து விடலாம். அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு பாஸ் புக் வழங்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்கள ஓர்க் லோட் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள், அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது பிராவிடண்ட் நிதி, அதாவது அவர்கள் வைப்பு நிதி பற்றிய கேள்வி. வேலைப்பளுவைப் பற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் பாஸ் புத்தகம் இன்னும் எத்தனை நாட்களில் கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாஸ் புக்குகள் தேவையில்லை ; இனிமேல் பிராட்மா இயந்திரத்தின் மூலம் சம்பளப் பட்டுவாடா செய்வதை மின் வாரியத்தில் உள்ள எல்லாத் தரப்பு தொழிலாளர்களுக்கும் அமல் படுத்தினால் இந்த பாஸ் புக்கே தேவைப்படாது.

1980-ஆம் வருடத்திய எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு.

* வினா எண். 546—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் '0' விழுக்காடு பெற்ற பள்ளிகள் எத்தனை ? அதில் தனியார் பள்ளிகள் எத்தனை ? அரசுப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகள் எத்தனை ? அதில் அரசுப் பள்ளிகள் எவ்வளவு ? தனியார் பள்ளிகள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

	எண்ணிக்கை.
(அ) 1980 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் '0' விழுக்காடு பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	11
அவைகளில், தனியார் பள்ளிகள் ..	3
அவைகளில், அரசுப் பள்ளிகள் ..	6
மீதமிரண்டும் மாநகராட்சிப் பள்ளிகளாகும்.	
(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	56
அவைகளில் அரசுப் பள்ளிகள்	20
தனியார் பள்ளிகள் ..	34
மீதமிரண்டும் நகராட்சிப் பள்ளிகளாகும்.	

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. நம்முடைய மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றபொழுது அவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள மார்க்குகளைப் பெற பெருமுயற்சி எடுத்துக் கொள்ளும் அதே நேரத்தில்